**திண்டிவனம் நகராட்சி**
**சாதாரண கூட்டம்**
**முன்னிலை:– திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.**

**30.11.2022 புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற சாதாரண கூட்டப் பொருள் விபரம்.**

| பொருள். எண் | பொருள் விபரம் |
|---|---|
| 1). | **கடந்த மாதம் 21.10.2022ல் நடைபெற்ற அவசர கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்.**<br>1. திண்டிவனம் நகராட்சியில் வருமானம் ஈட்டக்கூடிய இனங்களான சொத்துவரி, காலியிடவரி மற்றும் திடக்கழிவு கட்டணம் (SUC) மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.739.63 இலட்சமும், தொழில் வரியின் மூலம் ரூ.93.15 இலட்சமும், குடிநீர் கட்டணம் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.70 லட்சமும், ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகள் மூலம் ரூ.43.75 லட்சம், ஆக மொத்தம் ரூ.927.23 இலட்சம் வருவாய் ஈட்டப்படுகிறது. இதனை தவிர்த்து அரசிடமிருந்து மாநில பகிர்மான நிதி, முத்திரைதாள் கட்டணம் மற்றும் 15வது நிதிக்குழுவின் மூலமும் இந்நகராட்சிக்கு வருமானம் வருகிறது.<br>2. மேற்படி வருமானத்தை வைத்து நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம், மின்கட்டணம், தெருவிளக்கு பராமரிப்பு, தூய்மை பணி மேற்கொள்ளும் தனியார் நிறுவன தூய்மை பணியாளர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்குதல், பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் கொள்முதல் செய்தல் மற்றும் இதர செலவினங்களுக்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள போதிய நிதியாதாரம் இல்லாத நிலையில், பெரும்பாலான பணிகளுக்கு அரசிடமிருந்து மானியம் பெற்று வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே செய்யப்பட்ட பணிகளுக்கு அரசு துறைகளுக்கு கடன் செலுத்த வேண்டியுள்ளது.தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்கு நகராட்சி பங்களிப்பாக ரூ.39.09 கோடி செலுத்த வேண்டியுள்ளது.<br>3. 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 328–வது பிரிவின்படியும், அரசாணை எண்.1216, உள்ளாட்சி துறை, நாள்.04.04.1938, அரசாணை |

| | |
|---|---|
| | எண்.1915, உள்ளாட்சி துறை நாள்.22.07.1971, விதி 3(4), அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007, அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.19.09.2008–ன் குத்தகை விதிகளின் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3507/2004/பி3, நாள்.09.09.2005 மற்றும் ந.க.எண்.43339/2006/பி3, நாள்.01.08.2006 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.43339/2006/பி3, நாள்.01.08.2006 ஆகியவற்றில் நகராட்சிகளுக்கு போதிய நிதி ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு, நகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் கடைகள், அங்காடிகள், பேருந்து நிலையம், திரையரங்குகள், கல்யாண மண்டபங்கள் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகியவற்றினை கட்டிக்கொள்ளளாம் எனவும், அதற்கான நிதி ஆதாரத்தினை முன் ஏலம் (Pre-Auction) நடத்தி அதன் மூலம் முன் வைப்புத்தொகை (Deposit) மற்றும் முன் பணம் (Advance) பெற்று கட்டுமான பணியினை மேற்கொள்ளலாம் என உத்திரவிடப்பட்டுள்ளது.<br>4. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மற்றும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, திண்டிவனம் நகரளவை ஆவணங்களில் திண்டிவனம் நகரம், 122, அவரப்பாக்கம், வார்டு–C, பிளாக்–18, T.S,No.21, பழைய சர்வே எண்.106/1C, செஞ்சி ரோடு என்ற இடத்தில் பேருந்து நிலையம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள, திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான 2500 சதுர மீட்டர் (62 செண்ட்) பரப்பளவு கொண்ட இடம் ஏற்கனவே பேருந்து நிலையமாக செயல்பட்டு வந்துள்ளது.<br>5. மேற்படி செஞ்சி பேருந்து நிலையம் பல ஆண்டுகளாக பேருந்துகள் ஏதும் உள்ளே வந்து செல்லாத நிலையில் உள்ளதால், அந்த இடத்தில் சில தனிநபர்கள் கடைகள் மற்றும் வீடுகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்தும், தனிநபர் வாகனங்கள் நிறுத்துமிடமாகவும், இரவு நேரங்களில் சமூக விரோத செயல்கள் நடைபெற்று வரும் இடமாகவும், மேலும் பொதுமக்கள் தீங்கு ஏற்படுத்தும் விதமாக சிறுநீர், மலம் கழித்தல் போன்ற செயல்களால் அசுத்தம் ஏற்பட்டும் வருகிறது.<br>6. இந்நிலையில் , நீதிப்பேராணை எண் 24142 முதல் 24128 /2009ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.கோவிந்தசாமி த/பெ.குப்புசாமி, திரு.எஸ்.நடராஜன் த/பெ.சுப்ரமணி, திரு.ரங்கநாதன் த/பெ.வீராசாமி, திருமதி.முனியம்மாள் க/பெ. ஸ்ரீனிவாசன் மற்றும் திருமதி.மல்லிகா க/பெ. சுப்ரமணி ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் திண்டிவனம் |

| | |
|---|---|
| | நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண் 106/1C–ல் அடங்கிய 0.62 செண்ட் (2500ச.மீ) பரப்பளவு கொண்ட இடத்தில் மேற்படி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்றகோரி நகராட்சி மூலம் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பினை ஆட்சேபித்து வழக்கு சம்மந்தமாக 17.02.2016அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் மீது விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் விசாரணை செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ந.க.எண்.ஆ5/35247/2017/நாள்.21.04.2018ல் செயல்முறை உத்தரவு பிறப்பித்துள்ளார்.<br>7. மேற்படி செயல்முறை உத்தரவில், புல எண் 106/1Cல் உள்ள 0.62 ஏக்கர் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கும் இடங்களை விதிகளுக்குட்பட்டு விசாரணை மேற்கொண்டு தகுதியின் அடிப்படையில், மேற்படி வழக்கு தாக்கல் செய்த மனுதாரர்களுக்கு நிலம் ஒப்படைப்பு வழங்க திண்டிவனம் சார் ஆட்சியர் மற்றும் திண்டிவனம் வருவாய் வட்டாட்சியர் ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் மற்றும் தற்போது செய்யப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்பு இடங்களை தவிர எஞ்சியுள்ள இடங்களில் எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படாத வண்ணம் திண்டிவனம் நகராட்சி ஆணையாளர் தொடர் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.<br>8. மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண்.ஆ5/35247/ 2017/நாள்.21.04.2018ன் செயல்முறை உத்தரவில் குறிப்பிட்டுள்ளவாறு, திண்டிவனம் வட்டம் மற்றும் நகரம் அவரப்பாக்கம் புல எண் 106/1Cல் உள்ள 0.62 ஏக்கர் இடம் தோப்பு புறம்போக்கு என கிராம கணக்கில் தாக்கலாகி, குறிப்புக் காலத்தில் நகராட்சி பேருந்து நிலையம் என வகைப்படுத்தப்பட்டுள்ள இடத்தில், நீதிமன்ற உத்தரவின்படி வழக்கு தாக்கல் செய்துள்ள திரு.கோவிந்தசாமி த/பெ.குப்புசாமி, திரு.எஸ்.நடராஜன் த/பெ.சுப்ரமணி, திரு.ரங்கநாதன் த/பெ.வீராசாமி, திருமதி.முனியம்மாள் க/பெ. ஸ்ரீனிவாசன் மற்றும் திருமதி.மல்லிகா க/பெ. சுப்ரமணி ஆகிய 5 நபர்களுக்கு மட்டும் விதிகளுக்கு உட்பட்டு உரிய இடத்தினை அளவீடு செய்து ஒப்படைப்பு செய்யவும், எஞ்சிய இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி நகராட்சி வசம் ஒப்படைக்குமாறு சார் ஆட்சியர், திண்டிவனம் மற்றும் வட்டாட்சியர் திண்டிவனம் ஆகியோருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 4846/2022/எப்1 நாள்.17.10.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும் மேற்படி இடத்தில் பர்மா அகதிகளுக்கு விதிகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது நேரடி வாரிசுதாரர்கள் மட்டும் அனுபவித்து வரும் இடத்தினை தவிர்த்து மீதம் உள்ள இடத்தினை நகராட்சி வசம் |

| | |
|---|---|
| | கையகப்படுத்தலாம்.<br>9. திண்டிவனம் நகராட்சிக்கு வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, மேற்படி பயனற்ற நிலையில் உள்ள செஞ்சி பேருந்து நிலையத்தின் 62 செண்ட் இடத்தில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துவந்த நபர்களுக்கும் மற்றும் பர்மா அகதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் போக, மீதம் உள்ள இடத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று, முன் ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction / Pre Bid) மூலம் கடைகள் ஏலம் விட்டு, முன் வைப்புத் தொகை (Deposit) மற்றும் 12 மாத முன் பணம் (Advance) பெற்று அந்த தொகையினை கொண்டு தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கடைகள் கட்டி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானத்தை அதிகரிக்கலாம்.<br>10. மேற்படி கடைகளுக்கு முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஏதுவாக கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கடைகளுக்கு மாத வாடகை நிர்ணயம் செய்திடும் பொருட்டு, சார் பதிவாளர் வழிகாட்டு மதிப்பீடு, பதிவுத்துறை அலுவலகத்திலிருந்து பெற்றும், பொதுப்பணித்துறை விலை விகிதாச்சார அடிப்படையிலும், செஞ்சி பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் கடைகளின் தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றை அளவீடு செய்து அக்கடைகளுக்கான மாத வாடகை (சந்தை மதிப்பு) எவ்வளவு வசூலிக்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்து மாத வடகை நிர்ணயம் செய்யலாம்.<br>மேலும் செஞ்சி பேருந்து நிலையத்தில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஆக்கிரமிப்புகளை காலி செய்யும் பொருட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு, 182–ன் கீழ் அறிவிப்பு வழங்கி மேல்நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 4654 / அ1 /2022<br>**தீர்மானம் எண்: 209.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **2).** | திண்டிவனம் நகராட்சி ஆணையாளர் அவர்களது **அக்டோபர்** 2022 மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது,<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந,க,எண். 3999/2022/சி1)<br>**தீர்மானம் எண்: 210.**<br>**பதிவு செய்யப்பட்டது,** |

| 3). | இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் அனுமதியளிக்கப்பட்ட இரண்டு ஓட்டுநர் பணியிடமும், பொறியியல் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒரு ஓட்டுநர் பணியிடம் பத்து ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 481/2012/எப்3. நாள். 16.02.2022 ன் படி இப்பணியிடங்களை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள தூய்மைப் பணியாளர்கள், அடிப்படை பணியாளகள் மற்றும் இதரப் பணியாளர்களில் 8ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு தோல்வி / தேர்ச்சி பெற்று கனரக வாகன உரிமம் பெற்று தகுதி பெற்றவர்களில் ஓட்டுநர்களுக்கான ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியல் இவ்வலுவலக ந.க.எண் 4333/2020/சி1. நாள். 28.10.2022, செயல்முறை உத்தரவின் மூலம் கீழ்க்கண்டவாறு தயார் செய்து வெளியிடப்பட்டுள்ளது. |
|---|---|

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த தேதி | கல்வித் தகுதி | கனரக வாகன உரிமம் பெற்ற தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | கு.வினோத்குமார் அலுவலக உதவியாளர் | 03.06.1991 | 19.09.2011 | 10ம் வகுப்பு தேர்ச்சி | 24.10.2018 |
| 2 | ரா.தங்கராஜ் அலுவலக உதவியாளர் | 10.04.1987 | 04.07.2013 | 10ம் வகுப்பு தேர்ச்சி | 23.09.2016 |
| 3 | உ.ஜான்விக்டர் த/பெ.உள்ளியம் தூய்மை பணியாளர் | 22.03.1972 | 30.01.2014 | 10ம் வகுப்பு தோல்வி | 09.05.1996 |
| 4 | சு.ரவிக்குமார் த/பெ.சுபக்கண்ணு தூய்மைபணியாளர் | 27.05.1984 | 30.01.2014 | 10ம் வகுப்பு தோல்வி | 16.04.2014 |

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் 6 ஓட்டுநர் பணியிடத்தில் 2 பணியிடங்கள் பத்தாண்டுகளுக்கு மேல் காலியாக உள்ளது. அதே போன்று பொறியியல் பிரிவில் ஒரு ஓட்டுநர் பணியிடம் ஆறாண்டுகளுக்கு மேல் காலியாக

உள்ளது. ஓட்டுநர் பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு காலியாக உள்ளன.'

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | காலியிடம் ஏற்பட்ட நாள் | காரணம் |
|---|---|---|---|
| 1) | திரு.மரியதாஸ் (பொது சுகாதாரப் பிரிவு ஓட்டுநர்) | 31.05.2003 | பணி ஓய்வு |
| 2) | திரு.குணசேகரன் (பொது சுகாதாரப் பிரிவு ஓட்டுநர்) | 30.11.2010 | பணி ஓய்வு |
| 3) | திரு.பி.சண்முக வேலு (பொறியியல் பிரிவு ஓட்டுநர்) | 30.04.2016 | இறப்பு |

தற்பொழுது இந் நகராட்சியில் 9 குப்பைகள் அகற்றும் வாகனங்கள் மற்றும் 4 ஈப்பு வாகனங்கள் அலுவலக பயன்பாட்டில் உள்ளது. இவற்றை இயக்க போதுமான ஓட்டுநர்கள் இல்லை. தற்பொழுது திண்டிவனம் நகராட்சியில் பணியாளர் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் 2021-2022ம் ஆண்டிற்கு 49 சதவீதத்திற்கு அதிகமாக உள்ளது. எனினும் தற்பொழுது 4 ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். இவர்களைக் கொண்டு நகரில் குப்பைகளை அகற்றும் வாகனம் இயக்குதல் மற்றும் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்புகளை இயக்குவதில் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே இக் காலிப்பணியிடங்களை நிரப்பும் போது ஊதிய உயர்வுக்கான செலவினத் தொகையே கூடுதலாகும் என்பதாலும் நிர்வாக நலன் கருதி காலியாக உள்ள 3 ஓட்டுநர் பணியிடங்களை புதுப்பித்திடவும், முன்னுரிமை பட்டியலின்படி பதவி உயர்வின் மூலம் பூர்த்தி செய்யவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அல்லது வேறொரு நகராட்சியில் ஓட்டுநர் பணியிடம் காலியாக இருந்தால் அப்பணியிடத்தில் இவர்களை நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கோரவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,.'

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கூடுதல் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4333/2020/அ1)

**தீர்மானம் எண்: 211.**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **4).** | அரசாணை (நிலை) எண் 26 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 28.01.1994ல் காலதாமதமாக வசூல் செய்யப்படும் குத்தகை, வாடகை மற்றும் இதர வரவினங்களில் தண்ட வட்டியாக மாநகராட்சி / நகராட்சிகளில் 18 % வசூல் செய்யப்படவேண்டும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சில மாநகராட்சி / நகராட்சிகளில் காலதாமதமாக வசூல் செய்யப்படும் குத்தகை மற்றும் இதர வரவினங்களில் 18 % தண்ட வட்டி வசூல் செய்யப்படாததால் பெரும் நிதி இழப்பு ஏற்படுகிறது.<br><br>எனவே, அனைத்து நகர்புற உள்ளாட்சிகளும் மேற்படி அரசாணையில் ஆணையிட்டதின்படி, காலதாமதமாக வசூலிக்கப்படும் குத்தகை, வாடகை மற்றும் இதர வரவினங்களில் வசூலித்தால் தவறாமல் தண்ட வட்டி 18 %மும் வசூலிக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்க தவறினால், அந்நிதியிழப்பிற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்கள்தான் பொறுப்பு எனவும் அந்நிதியிழப்புத் தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 32894/ஆர்2/2022. நாள்.10.11.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>(ந,க,எண்.4835/2017/அ1)<br><br>**தீர்மானம் எண்: 212.**<br>**பதிவு செய்யப்பட்டது,** |

| | |
|---|---|
| 5). | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.26178/2017/பி3 நாள்.11.12.2017ன் படி இந்நகராட்சியில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 124 பணியாளர்களை பணிக்கு அமர்த்தி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி திண்டிவனம் நகரில் உள்ள 18 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்ய 06.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/S சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நகர மன்ற தீர்மான எண்.46 நாள்.22.02.2019ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு ந.க.எண்.977/2017/எச்1, நாள்.28.02.2019 படி பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.03.2019 முதல் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் ந.க.எண்.30813/J3.2018 நாள்.11.12.2018ல் கூடுதலாக 42 பணியாளர்களை அமர்த்தி திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் செய்ய அனுமதி வழங்கியதன் பேரில் ஏற்கனவே நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை செய்து வரும் M/S சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு 124 பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு இருந்த நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.453/- என்ற விகிதத்திலேயே கூடுதலாக 7 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்குவதற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு ந.க.எண்.977/2017/எச்1, நாள்.01.08.2020 படி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு மொத்தம் 173 தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 01.08.2020 தேதியிலிருந்து ந.க.எண்.977/2017/எச்1, நாள்.01.08.2020 வழங்குவதற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி நிறுவனம் 01.03.2019 முதல் நகராட்சி அலுவலக உத்தரவில் குறிப்பிட்ட வகையில் பணியாளர்களை பணிக்கு அமர்த்தி நல்ல முறையில் குப்பைகளை சேகரித்தல் தரம் பிரித்தல் சாலைகள் பெருக்குதல், கால்வாய் சுத்தம் செய்தல், இயற்கை உரம் தயாரித்தல், உள்ளிட்ட அனைத்து திடக்கழிவு |

| | |
|---|---|
| | மேலாண்மைப் பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றனர். மேலும் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய சேமநல நிதி, காப்பீடு முதலியவற்றையும் முறையாக செலுத்தி ரசீது வழங்கி உள்ளனர். இவர்களுக்கு ஒப்பந்த காலம் 28.02.2022 ல் முடிவடைந்துவிட்டதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 சுற்றிக்கையின் படி புதியதாக ஒப்புந்தப்புள்ளி கோர இவ்வலுவலக ந.க.எண். 4302/2021/எச்1 நாள்.19.11.2021 கடிதம் மூலம் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது வரை நிர்வாக அனுமதி பெறப்படவில்லை.புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.எனவே இந்நகராட்சியிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தொய்வின்றி நடைபெறும் பொருட்டும் M/S சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே தினக்கூலி தொகை ரூ.509/- (EPF, ESI உட்பட) அடிப்படையில் 01.12.2022 முதல் 31.12.2022 வரை 31 நாட்களுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.28.00 இலட்சத்திற்கு(ரூபாய் இருபத்துஎட்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1. ஒப்பந்தம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.28.00/- இலட்சம் வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.977/2017/எச்1)<br><br>**தீர்மானம் எண்: 213.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **6).** | திண்டிவனம் நகராட்சிக்குட்ப்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள விடுபட்ட பகுதிகள் ,நகர்கள் மற்றும் தெருக்களுக்கு 2021-2022 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட Un Tied Grant நிதியிலிருந்து ரூ.91.94 இலட்சம் மதீப்பீட்டில் புதியதாக LED மின் விளக்குகள் 253 எண்ணிக்கை, மின் இணைப்பு பெற்று LED மின் விளக்குகள் 224 எண்ணிக்கை மற்றும் புதியதாக மின் கம்பம் நடப்பட்டு மின் இணைப்புடன் LED மின்விளக்குகள் 198 எண்ணிக்கை ஆக மொத்தம் 675 LED மின்விளக்குகள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் செயல்மறை உத்தரவு ந.க.எண்:31118/2021/CFC-1 நாள் 14.10.2022-ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>மேலும் ,மேற்படி திட்டத்தின் மொத்த நிதியான ரூ.91.94 இலட்சத்தில் 15-வது நிதிக்குழு நிதியின் கீழ் Un Tied Grant-ல் இருந்து ரூ.88.00 இலட்சம் போக மீதமுள்ள ரூ.3.94 இலட்சம் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெற மன்ற அனுமதி எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 4037/2022/இ2<br><br>**தீர்மானம் எண்: 214.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**7).** இந்நகராட்சியில் துலக்குனராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.09.2022ல் ஒய்வுபெற்ற **திரு. அ.குமார்** என்பவர் சிறப்பு சேமநல நிதி கணக்கினை முடித்து அதற்கான தொகை வழங்க கோரி 19.09.2022 தேதிய விண்ணப்பத்தின் மூலம் கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம், உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்த நாள் | **25.01.1990** |
| 2 | பணியிலிருந்து ஒய்வு பெற்ற நாள் | **30.09.2022** |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | **148** தவணைகள். |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | **30.11.2002** |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | **வட்டிக்கணக்கீடு (01.08.1990 முதல் 30.09.2020 வரை கணக்கீடப்பட்டுள்ளது)** | ரூ.20882/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | **ரூ.10000/–** |
| | **மொத்தம்** | **ரூ.33842/-** |

எனவே **திரு.அ.குமார்,** ஒய்வுபெற்ற துலக்குனருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ.2960/–ம், வட்டித் தொகை ரூ.20882–ம், நகராட்சி பங்குத் தொகை ரூ.10000/–ம் சேர்த்து **மொத்தம் ரு.33842/–**ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4505/2022/பி2)

**தீர்மானம் எண்: 215.**
**அனுமதிக்கப்பட்டது.**

**8).** அரசாணை (MS) எண்.158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகம் (MC.4) துறை நாள் .02.11.2022–ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) பொறியியல் பிரிவு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பாளர், ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிப்பவர், நிர்வாக அனுமதியாளர், தொழில் நுட்ப அனுமதி அளிப்பவர் மற்றும் அளவீடுகள் மற்றும் அளவீடுகள் சரிபார்ப்பவர் மற்றும்

| | |
|---|---|
| | அதிகாரிகளின் பண வரம்பு திருத்தங்கள் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக் குறிப்பு .**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்: 216.**<br>**பதிவு செய்யப்பட்டது,** |
| **9).** | இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022 – 2023ன் கீழ், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு ந.க.எண் : 8879/2022/தி1, நாள் : 27/06/2022ன் மூலம் பின்வரும் பணிக்கு 15.07.2022 அன்று வரை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சி மருத்துவமனை சாலையில் நகர சர்வே எண்.18, பழைய சர்வே எண்.161/2ல் வேணுகோபால் பூங்காவில் அறிவுசார் மையம் அமைத்தல் பணி. | 186.68/- | **எம்/எஸ். டி.டீ.ஆர் & கோ** | – 0.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | **எம்/எஸ். எஸ்.ஆர்.வி கண்ஸ்ரக்சன்ஸ்** | 0.08% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு :-**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள **எம்/எஸ். டி.டீ.ஆர் & கோ,** திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம் .

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2137/ இ1/2022

**தீர்மானம் எண்: 217.**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **10).** | இந்நகராட்சிக்குட்பட்ட சொந்தமான கண்டரக்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் 15.11.2022 அன்று மதியம் 12.30 மணியளவில் அதிவேக காற்று வீசியதால் மின்சார ஒயர்களின் மூலம் மின் கம்பிகள் ஒன்றொடு ஒன்று உராய்வின் காரணமாக 20 எச்.பி போர்வெல் மின் மோட்டார் காயில் எரிந்து விட்டதால், மோட்டார்கள் பழுதடைந்து இயக்கத்தில் இயங்காமல் உள்ளது. ,மேற்படி போர்வெல்லில் இருந்து கிரேனைட் மூலமாக 20 எச்.பி மின்மோட்டாரை மேலே தூக்கி மின்மோட்டார் காயில் மற்றும் பம்புகளை பழுதுகளை புதுப்பித்து மீண்டும் போர்வெல்லில் இறக்கி இயக்க மதிப்பீட்டு தொகை ரூ.1.50/−இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ,மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் :5433/இ2/2022<br>**தீர்மானம் எண்: 218.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **11).** | இந்நகராட்சிக்குட்பட்ட சொந்தமான கண்ட்ரக்கோட்டை தலைமை நீரேற்று நிலையங்களில் உள்ள 10 போர் வெல்களில் உள்ள மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை (Rewinding ) சரி செய்யும் மற்றும் ரீவைண்டிங் செய்திடவும் ,மேலும் தலைமை நீரேற்று நிலையத்திற்கும் , திண்டிவனம் நகரில் உள்ள 75 Km பம்பிங் மெயினில் ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்திட, வருடாந்திர பராமரிப்பு பணிக்கு (01.12.2022 முதல் 31.03.2023) டிசம்பர் முதல் மார்ச் வரையிலான பணிக்கு மதீப்பிட்டு தொகை ரூ.2.00/−இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:5119/இ2/2022<br>**தீர்மானம் எண்: 219.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **12).** | இந்நகராட்சிக்குட்பட்ட சொந்தமான காட்ராம்பாக்கம், ரெட்டணை மற்றும் இறையனூர் ஆகிய தலைமை நீரேற்று நிலையங்களில் உள்ள 40 எச்.பி, மற்றும் 75 எச்.பி உள்ளிட்ட இதர அனைத்து மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் மற்றும் (Rewinding ) ரீவைண்டிங் செய்திடவும், மேலும் தலைமை நீரேற்று நிலையங்களில் இருந்து வரும் குடிநீர் திண்டிவனம் நகரில் உள்ள 75 Km பம்பிங் மெயினில் ஏற்படும் பைப் லைன் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு நகருக்கு வரும் குடிநீர் விநியோகம் பாதிப்படைவதால், அவற்றை சரி செய்யவும் மற்றும் தலைமை நீரேற்று நிலையங்களில் பழுதுகளை அவ்வப்போது சரி செய்திட (01.12.2022 முதல் 31.03,2023) டிசம்பர்–2022 முதல் மார்ச்–2023 வரையிலான பணிக்கு பராமரிப்பிற்கு ஆகும் மதீப்பிட்டு தொகை ரூ.4.00/- இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 5120/இ2/2022<br>**தீர்மானம் எண்: 220.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **13).** | இந் நகராட்சியில் பயன்படுத்தப்படும் கணினிகள், பிரிண்டர்கள், சர்வர் மற்றும் லேப்டாப் கம்ப்யூட்டர் ஆகியவைகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 03.10.2021 முதல் 02.10.2022 வரை கணினி ஆண்டு பராமரிப்பு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் திரு. G. தனசேகரன், ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனத்திடம் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.319 நாள். 29.10.2021ல் அனுமதி அளித்தது.<br>தற்போது பராமரிப்புக் காலம் முடிவடைந்துவிட்டதால் 03.10.2022 முதல் 02.10.2023 முடிய கணினி ஆண்டு பராமரிப்பு மேலும் ஒரு ஆண்டுக்கு மேற்படி பணியினை அதே விலை விகிதத்தில் மேற்கண்ட நிறுவனம் செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. எனவே மேலும் ஒரு ஆண்டுக்கு மேற்படி பராமரிப்பு |

| | |
|---|---|
| | பணியினை G.தனசேகரன், ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனத்திடம் பழைய விலை விகிதத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . 1266/2013 /பி2)<br>**தீர்மானம் எண்: 221.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **14).** | இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளதால், அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களுக்கு தேவையான புதிய டோனர்கள் மற்றும் ரீ–Filling டோனர்கள் பயன்பாடு தேவை ஏற்படுகிறது. ஒவ்வொரு பிரிவுகளிலும் கணினியில் தட்டச்சு செய்வதை பிரிண்ட் எடுப்பதற்கும், வருவய்பிரிவில் சொத்துவரி, தொழில்வரி, கடைவாடகை அறிவிப்பு நோட்டீஸ்கள் பிரிண்ட் எடுப்பதற்கும், பொறியியல் பிரிவு பணிகள், பொதுசுகாதாரப்பிரிவு பணிகள் மற்றும் நகரமைப்பு பிரிவு , பணிகள் கணினியில் பிரிண்ட் எடுப்பதற்கும், காசாளர் பிரிவில் செலுத்துச்சீட்டுகள் பிரிண்ட் எடுக்கவும், அனைத்து பிரிவு கணினி பிரிண்டர்களுக்கும் டோனர்கள் தேவையாக உள்ளது. தற்போது கணினி டோனர்கள் இருப்பு இல்லாததால் புதியதாக வாங்கி பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.<br>எனவே, 2022–2023ம் ஆண்டிற்கு தேவையான டோனர்கள் ரீ–Filling டோனர்கள் கலர் பிரிண்டருக்கு தேவையான இங்க் ஆகியவற்றை வாங்கி பயன்படுத்திக் கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும், 2021–2022ம் ஆண்டில் சப்ளை செய்த திரு.எஸ்..தனசேகரன், ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனத்திடமிருந்து பழைய விலை விகிதத்தில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –**<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2297/2019/பி2)<br>**தீர்மானம் எண்: 222.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **15).** | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வடக்கிழக்கு பருவமழை பெய்து வருவதால் 1 முதல் 33 வார்டுகளிலும் உள்ள குப்பைகளை அகற்றி அந்தந்த பகுதிகளில் கிருமிநாசினி தெளிப்பதற்கும் *மழைநீர் தேங்கி ஆங்காங்கே கொசு உற்பத்தி அதிகமாக இருப்பதால் முதிர் கொசுக்களை அழிப்பதற்கு புகை மருந்து தெளிப்பதற்கும் மற்றும் கொசு புழுக்களை அழிப்பதற்கும்* கீழ்காணும் பொருட்களை வாங்கி வழங்கிடவும் மற்றும் பழுது நீக்கம் செய்திடவும் ஆகும் செலவினம் ரூ.8,00,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1) *நீர்த்த சுண்ணாம்பு* – 15 *டன்*<br>2) *பிளீச்சிங் பவுடர்* – 10 *டன்*<br>3) Hand Fogging Machine Small – 5 (*பழுது நீக்கம்*)<br>4) Mega Fogging (Vehicle Mountain)– 1 (*பழுது நீக்கம்*)<br>5) Hand spray (*பித்தளை*) Machine– 4 No's (*புதியதாக*) (Division–*க்கு* 1 *வீதம்*)<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்**.2128/2020/**எச்1**)<br>**தீர்மானம் எண்: 223.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **16).** | திண்டிவனம் புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்குள் அலுவலக பணியாளர்களுக்கான கழிப்பிட வசதியில்லாமல், இக்கட்டிடத்தின் வெளிபுறத்தில் பொதுவான கழிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளதால், மழைக்காலங்களில் மற்றும் இரவு நேரத்தில் பெண் பணியாளர்கள் வெளிபுறத்தில் உள்ள கழிப்பிடத்தை பயன்படுத்த வேண்டி உள்ளதால் பாதுகாப்பு இன்றியும், பாம்புகள் நடமாட்டம் அதிகமாக உள்ளதால் மிகவும் அச்சமாக உள்ளதாகவும், இதனால் பணியாளர்களின் பாதுகாப்பு கருதி அலுவலக பணியாளர்களுக்கென கட்டிடத்தின் உள்பகுதியிலேயே கழிப்பிடம் அமைத்து தருமாறு அலுவலக பணியாளர்கள் சார்பாக மனு வரப்பெற்றுள்ளது. மனு ஆய்வு செய்யப்பட்டு இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தின் தெற்கு பகுதியில் அலுவலக கட்டிடத்தின் உட்பகுதியிலேயே புதியதாக அலுவலக பணியாளர்களுக்கு (ஆண் மற்றும் பெண்) கழிப்பிடம் அமைக்க மதிப்பீடு ரூபாய் 6.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறுலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும் ) தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : /இ1/2022<br>**தீர்மானம் எண்: 224.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 17). | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி வருவாய் நிதி – 2022–2023ன்** கீழ் நகர மன்ற தீர்மான எண் : 72 நாள் : 26.08.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** (ரூ இலட்சத்தில்) | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|---|
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட சலவாதி சாலையில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடையில் 5எச்.பி புலோயர் மோட்டார் (Blower Motor), ஹுமன் பாடி டிராலி ( Human Body Trally), ரோல்லிங் ஷட்டர் (Rolling Shutter), கார்டனிங் கிராஸ் கட்டர் (gardening cross cutter), மற்றும் பைப் லைன் வசதி ஆகிய பணிகளை செய்து வழங்குதல் பணி. | 4.70 | எம்/எஸ். எம்.எச்.டி இஞ்சினியரிங், சென்னை. | –0.64% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எம்/எஸ். எஸ்.எஸ்.ஜெயி இஞ்சினியரிங், சென்னை. | 6.73% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ். எம்.எச்.டி இஞ்சினியரிங், சென்னை நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 3607/இ1/2022)**

**தீர்மானம் எண்: 225.**
**அனுமதிக்கப்பட்டது.**

| 18). | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி வருவாய் நிதி – 2022–2023ன்** கீழ் நகர மன்ற தீர்மான எண் : 73 நாள் : 26.08.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட சலவாதி சாலையில் இயங்கி வரும் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணி ஆகஸ்ட் (31.08.2022)–ல் முடிவடைவதால் மேற்படி நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகளான பிரேதம் எரிக்கும் பணி, அதற்கு தேவையான சிலிண்டர்கள் மற்றும் தோட்டங்களை ஓராண்டிற்கு (01.09.2022 முதல் 31.08.2023 வரை) பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி. | 9.90 | எம்/எஸ். எம்.எச்.டி இஞ்சினியரிங், சென்னை. | –0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எம்/எஸ். எஸ்.எஸ்.ஜெயி இஞ்சினியரிங், சென்னை. | 2.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1.) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ். எம்.எச்.டி இஞ்சினியரிங், சென்னை நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 3700/இ1/2022)

**தீர்மானம் எண்: 226.**
**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 19). | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி வருவாய் நிதி – 2022–2023ன்** கீழ் நகர மன்ற தீர்மான எண் : 77 நாள் : 26.08.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 6 | நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமையுள்ள இடத்தில் செயற்பொறியாளர், கீழ்பெண்ணையாறு, வடிநில கோட்டம், விழுப்புரம் அவர்களின் கடிதத்தின் படி ஏரியின் கலிங்கு பகுதியில் தடுப்பணை (Weir Body Well) கட்டுதல் பணி. | 9.50 | திருமதி. வி.புவனேஸ்வரி, திண்டிவனம் | 0.00% மதிப்பீட்டு விலை விகிதத்தில் |
| | | | திரு.கே.சுப்பராயலு , திண்டிவனம் | 7.66% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1.) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. வி.புவனேஸ்வரி, திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 3219/இ1/2022)

**தீர்மானம் எண்: 227.**
**அனுமதிக்கப்பட்டது.**

| 20). | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி குடிநீர் நிதி – 2022–2023ன்** கீழ் நகர மன்ற தீர்மான எண் : 65 நாள் : 26.08.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 9 | வார்டு எண். 23ல் வீராங்குளம் முதல் தெருவில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் ஊற்று குறைவாக உள்ளதால் மோட்டர் பழுதடைந்துள்ளது. எனவே புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டர் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் பணி | 1.50 | எம்/எஸ். பி.கே.பி கண்ஸ்ரக்சன்ஸ், திண்டிவனம் | –0.11% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எம்/எஸ். ஹரிகன்ஸ்ரக்சன்ஸ், திண்டிவனம் | 0.81% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ். பி.கே.பி கண்ஸ்ரக்சன்ஸ், திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 3595/இ2/2022)**

**தீர்மானம் எண்: 228.**
**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 21). | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கல்வி நிதி – 2022–2023ன்** கீழ் நகர மன்ற தீர்மான எண் : 68 நாள் : 26.08.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|---|
| 12 | வார்டு எண்– 11ல் காவேரிப்பாக்கம் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் கை கழுவும் பகுதியில் பழுதடைந்துள்ளதை மாற்றி புதியதாக கை கழுவும் இடம் அமைத்தல் பணி. | 2.00 | திருமதி. வி.புவனேஸ்வரி, திண்டிவனம் | –0.08% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.சுப்பராயலு , திண்டிவனம் | 0.36% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. வி.புவனேஸ்வரி, திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 1387/இ1/2022)**

**தீர்மானம் எண்: 229.**

**அனுமதிக்கப்பட்டது.**

**22).** இந்நகராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம்-2021-2022ன் கீழ் மாவட்ட ஆட்சி தலைவர் விழுப்புரம் அவர்களின் செயல் முறை உத்தரவு ந.க.எண் : ஆ6/2099/2021 நாள் : 19/07/2022 மற்றும் நகர மன்ற தீர்மான எண் : 122 நாள் : 26.08.2022ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 19.10.2022 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 14 | பாரதிதாசன் நகர் கல்லூரி சாலையில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல் பணி | 2.50 | வீ லைட்ஸ், ஆத்தூர் | -0.31% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | வீனஸ் எண்டர்பிரைசஸ் | 0.24% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ்.வீ லைட்ஸ், ஆத்தூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 230.**
**அனுமதிக்கப்பட்டது.**

**23).** இந்நகராட்சியில் வருவாய் நிதி 2022 – 2023ன் கீழ் பின்வரும் பணிக்கு 19.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (%) | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் (திருவாளர்கள்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | வார்டு எண்.4ல் ரோஷணை தெருவில் பழுதுடைந்துள்ள கழிப்பிடத்தை பராமரிப்பு பணிகள் செய்தல். (நகர மன்ற தீர்மான எண் : 62 நாள் : 26.08.2021) | 5.00 | டி.டீ.ஆர். & கோ | – | – 0.03 | டி.டீ.ஆர். & கோ |
| | | | எம். தமிழ்வாணன் | 0.55 | – | |

**அலுவலக குறிப்பு :-**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 7ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரிகளின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 231.**
**அனுமதிக்கப்பட்டது.**

**24).** இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2022 – 2023ன் கீழ் பின்வரும் பணிக்கு 19.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் (திருவாளர்கள்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சிறு மின்விசை பம்புகள் மற்றும் மோட்டார்கள் அவ்வப்போது பழுது ஏற்படும் போது அதனை சரி செய்தல் பணி. | 3.00 | ஓம் சக்தி எலக்டிரிகல்ஸ் | – | –0.27 | ஓம் சக்தி எலக்டிரிகல்ஸ் |
| | | | பி.சரவணமூர்த்தி | +0.01 | – | |
| 2 | நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண் அனைத்து வார்டுகளில் குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் பழதுகளை சரி செய்யும் தேவையான உதிரி பொருட்களை விநியோகம் பொருத்தும் பணி | 3.00 | கே. செந்தில்குமார் | – | –0.06 | கே. செந்தில்குமார் |
| | | | எம்.தமிழ்வாணன் | +1.18 | – | |
| 3 | இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்–22ல்பெருமாள் கோயில் தெருவில் கிடங்கல்–2பகுதியில் குடிநீர் அத்தியவசயமான தேவை கருதி பழைய போர் பழுதடைந்ததை சுத்தம் செய்யவும் ,புதியதாக மோட்டர் அமைத்து,மேடை மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணி | 2.00 | பி.சரவணமூர்த்தி | – | –0.09 | பி.சரவணமூர்த்தி |
| | | | பி.கே.பி கண்ஸ்ரக்சன்ஸ் | +1.78 | – | |

**அலுவலக குறிப்பு :—**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 7ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரிகளின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 232.**
**அனுமதிக்கப்பட்டது.**

**25).** திண்டிவனம் நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் பின்வரும் பணிகளின் அவசிய அவசரம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920, பிரிவு 15—ன் கீழ் கீழ்க்காணும் பணிகள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிதிகள் விவரம் | பணியின் விவரம் |
|---|---|---|
| 1 | வருவாய் நிதி | தமிழ் நாடு சாதராண நகர்புற உள்ளாட்சி தேர்தல் பணியின் வார்டு எண்ணிக்கை மையம் புனித அன்னாள் நூற்றாண்டு விழா கட்டிடத்தில் நடைபெற்ற தடுப்புகள் கம்பிவலைவேலி GI Sheet அடைப்புகள் மற்றும் பாதுகாப்பு அறை பணி மேற்கொள்ளப்பட்டது. |
| 2 | வருவாய் நிதி | திண்டிவனம் நகராட்சியில் 17.03.2022 அன்று தேசிய பசுமை தீர்ப்பாய மாநில கண்காணிப்பு குழு தலைவர் அவர்களால் நுண்ணுயிர் உரக்கிடங்குகள் ,மரபுவழி குப்பைகளை பிரித்தெடுக்கும் பணி மற்றும் திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் ஆய்வுகூட்டம் நடைப்பெற்றதற்கு சாமியானா பந்தல் சேர் , பிளாக்ஸ் பேனர் மற்றும் பூங்கொத்து மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. |
| 3 | வருவாய் நிதி | தமிழ் நாடு சாதராண நகர்புற உள்ளாட்சி தேர்தல் பணிக்கு அமைக்கப்பட்டுள்ள அனைத்து வாக்கு சாவடி மையங்களிலும் குடிநீர் வசதி , மின்சார வசதி, சாய்வுதள வசதி மற்றும் இதர வசதிகள் மேற்க்கொள்ளப்பட்டது. |
| 4. | குடிநீர் நிதி | திண்டிவனம் நகராட்சி பகுதிகளுக்கு காட்ராம்பாக்கம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நீரேற்று நிலையத்தில் உள்ள 20Hp மோட்டார் காயில் பழுதடைந்துள்ளதாலும், கேபிள் மற்றும் பைப் லைன் ஆகியவை சரி செய்தல் பணி . |

| | | |
|---|---|---|
| 5. | வருவாய் நிதி | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட 01 முதல் 18 வரையுள்ள வார்டுகளில் உள்ள மண் சாலைகளில் ஏற்பட்டுள்ள மேடுபள்ளங்களில் வெட்மிக்ஸ் தயார் செய்து லாரி மூலம் கொண்டு வந்து ஜேசிபியால் (JCB) பரப்பி சமன்படுத்துதல் பணி |
| 6. | வருவாய் நிதி | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட 19 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் உள்ள மண் சாலைகளில் ஏற்பட்டுள்ள மேடுபள்ளங்களில் வெட்மிக்ஸ் தயார் செய்து லாரி மூலம் கொண்டு வந்து ஜேசிபியால் (JCB) பரப்பி சமன்படுத்துதல் பணி |
| 7 | வருவாய் நிதி | வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள மழைநீர் கால்வாயினை தூர்வாரி அப்புறப்படுத்திடவும் மற்றும் ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டு மழைநீர் ஊருக்குள் புகாமல் தடுக்கும் வண்ணம் மணல் மூட்டைகள், ஜே.சி.பி, ஜெயின் டோசர் கொண்டு உடனுக்குடன் தடுப்பு பணிகளை மேற்கொள்ளளுதல் பணி |
| 8 | வருவாய் நிதி | இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்– 12 ல் திருவள்ளுவர் தெருவில் (சாராயக்காரத் தெரு) உள்ள சிறுபாலம் தற்போது வடகிழக்கு பருவமழையின் போது மழைநீர் தேங்கி சிறுபாலம் பழுதடைந்து அப்பகுதி பொதுமக்களின் குடியிருப்பிற்கும் மற்றும் வணிக நிறுவனங்களிலும் மழை நீர் புகுந்ததால் அதனை உடனடியாக அப்புறப்படுத்துமாறு நகரமன்ற தலைவர், மற்றும் நகரமன்ற உறுப்பினர் தெரிவித்தின் பேரில் மேற்படி பணிக்கு தேவையான JCB, CRANE, BREAKER , LORRY, WETMIX, கொண்டு சிறுபாலத்தினை சீரமைத்தல் பணி |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்: 233.**

**பதிவு செய்யப்பட்டது,**

**ஒம்)/– திருமதி.ஆர்.நிர்மலா.,**
**தலைவர்,**
**திண்டிவனம் நகர மன்றம்.**

.